செ.வெ.எண்: 24 நாள்: 09.03.2017

# பத்திரிகைச் செய்தி

## ஓய்வூதியர்களுக்கு மின்னனு வாழ்வு சான்றிதழ் சேவை

தமிழக அரசு ஓய்வூதியர்களுக்கு 2017-18 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் திட்டமான ”ஜீவன் பிரமான்”(Jeevan Pramaan) எனப்படும் மின்னனு வாழ்வு சான்றிதழ் சேவை தற்போது துவங்கப்பட்டுள்ளது. எனவே புதுக்கோட்டை மாவட்ட கருவூலம் மற்றும் சார்நிலை கருவூலங்கள் மூலமாக ஓய்வூதியம் பெற்று வருகின்ற ஓய்வூதியர்கள், 01.04.2017 முதல் நடைபெறயிருக்கும் 2017-2018-ம் நிதியாண்டிற்கான நேர்காணலுக்கு இந்த மின்னனு வாழ்வு சான்றிதழ் (Digital Life Certificate) சேவையை பயன்படுத்திக்கொள்ள விரும்புவர்கள் அந்தந்த தாலுகாக்களில் அரசு கேபிள் டிவி கார்பரேசன் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இ-சேவை மையங்களில் தங்களது ஆதார் எண் மற்றும் கைவிரல் ரேகையினை பதிவுசெய்து ஓய்வூதியம் குறித்த தகவல்களைத் தெரிவித்தால், அவர்களுக்கு மின்னனு வாழ்வு சான்றிதழ் பதிவு மேற்க்கொள்ளப்படும். இந்த ”ஜீவன் பிரமான்” என்ற இணையதள சேவை மூலம் மின்னனு வாழ்வு சான்று அளிப்பவர்கள் கருவூலத்திற்கு நேரடியாக வரவேண்டியதில்லை.

இதுவரையில் கருவூலத்தில் ஆதார் எண் சமர்பிக்காத ஓய்வூதியர்கள், சம்பந்தப்பட்ட கருவூலங்களில் உடனடியாக தங்களது ஆதார் எண் பற்றிய விபரத்தினை அளித்திடும்மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட கருவூல அலுவலர் திருமதி.ரமா அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**